2013 ஏப்ரல் 1]

முற்பகல் 10–30

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழ்நாடு வன விலங்கியல் வாரியம் அமைக்கப்படாமல் இருக்கிறது. அந்த வாரியம் அமைக்கப்படாததால், நமக்கு விரைவாக மின்சாரம் வழங்கக்கூடிய மூன்று அனல் மின் திட்டங்கள் நிறைவேறத் தடையாக இருக்கிறது. இந்த வன விலங்கியல் வாரியம் விரைவில் அமைக்கப்பெறவும், மத்திய வாரியத்திடமிருந்து அந்த மூன்று மின் திட்டங்களுக்கான அனுமதி கிடைக்கப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உடனடியாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

111—

புறவழிச் சாலை

***6578—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் நகரம் மாநில நெடுஞ்சாலையில் (SH29) *புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க நிலத்தைக் கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், காவேரியை மீட்டுத் தந்த காவேரித் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்கி, முதுகுளத்தூர் நகரத்தில் மாநில நெடுஞ்சாலை SH29, நகரின் மத்தியப் பகுதியில் செல்வதாலும், போக்குவரத்து நெரிசல் காரணத்தாலும், மையப் பகுதியில் 400 மீட்டர் நீளத்திற்கு மிகக் குறுகிய ஒருவழிச் சாலையாக இருப்பதால், அப்பகுதியில் மிகுந்த வாகன நெரிசல் ஏற்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பணியை எடுத்துச் செய்வதற்காக ரூ.5.25 கோடி ஒதுக்கிய நிலையிலும், முதுகுளத்தூர் பொதுப் பணித் துறையினுடைய கண்மாயில் அந்தச் சாலை செல்வதால், கிட்டத்தட்ட கண்மாயில் 1,900 மீட்டர் நீளத்தில் 1,200 மீட்டர் நீளத்திற்கு கண்மாயினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதி இல்லாத பகுதியிலும், 600 மீட்டர் நீளம் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் புறவழிச் சாலை செல்வதால், எந்தவிதத்திலும் நீர் ஆதாரத்தைப் பாதிக்காத நிலையிலும், கொள்ளளவுக் குறையாத நிலையில் உள்ளதால், நெடுஞ்சாலைத் துறையினர் பொதுப் பணித் துறையின் அனுமதியை எதிர்நோக்கி இருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த அனுமதியை வழங்கி, வரும் நிதியாண்டிலேயே அந்தப் பணி முடிவுற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

2013 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் நகரத்தில் புறவழிச் சாலை 4 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைய உள்ளது. இப்புறவழிச் சாலை, மாநில நெடுஞ்சாலை எண் 29 தஞ்சாவூர்–சாயல்குடி சாலை 225/885–ல் துவங்கி, அதே சாலை கி.மீ. 229/265–ல் முடிவடையும் வகையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மேலமுதுகுளத்தூர் மற்றும் கீழமுதுகுளத்தூர் கிராமங்களில் தனியாரின் பட்டா நிலங்கள் 5.73 ஹெக்டேர் மற்றும் அரசுப் புறம்போக்கு நிலம் 6.83 ஹெக்டேர் ஆக மொத்தம் 12.56 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், தனியார் ஒருவர் நிலத்தைக் கையகப்படுத்துவதை எதிர்த்து, மதுரை உயர் நீதிமன்றத்திலே தடையாணை பெறப்பட்டுள்ளது. அந்தத் தடையாணையின் மீதான வழக்கு 22–3–2013 அன்று விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் வராததால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வழக்கை விரைந்து முடிப்பதற்கு அரசு தரப்பில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு புறவழிச் சாலை 1,900 மீட்டர் நீளத்திற்கு முதுகுளத்தூர் கண்மாய் வழியாகச் செல்வதால் அந்தக் கண்மாயில் நீர்வரத்து பாதிக்காதவகையில் அனைத்து நடவடிக்கைகளும் அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறி, அந்தப் பணியை விரைந்து முடிக்க மீண்டும் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

[2013 ஏப்ரல் 1

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட, திருச்சி சாலை, அதாவது காங்கேயம்பாளையத்திலிருந்து சிந்தாமணி L & D பைபாஸ் வழியாக 7-1/2 கிலோ மீட்டர் தொலைவிற்கு இரண்டு வழிப்பாதையாக இருக்கின்றது. அதை நான்கு வழிப் பாதையாக மாற்ற வேண்டுமென்று அங்கே இருக்கின்ற பொதுமக்களும் மற்றும் அனைத்து அரசியல் இயக்கங்களும், பல்வேறு போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இதற்கு முழுக் காரணம், அங்கே தினந்தோறும் விபத்துகள்மூலம் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதுகுறித்து இன்று காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு ஒன்றும் அளித்துள்ளேன். தேசிய நெடுஞ்சாலையாக இருந்த இந்தச் சாலை மாநில நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டது என்று கடந்த மாதம் 24 ஆம் தேதியன்று பத்திரிகையிலும் செய்திகள் வரப்பெற்றுள்ளன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், சுருக்கமாக துணைக் கேள்வி மட்டும் கேளுங்கள்.*

திரு. க. தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்விதான் கேட்கிறேன். மிகவும் முக்கியமானது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. க. தினகரன், சுருக்கமாக துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

முற்பகல் 10–35

திரு. க. தினகரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து, சூலூர் தொகுதி, காங்கேயம்பாளையத்திலிருந்து சிந்தாமணிபுதூர் வரையுள்ள ஏழரை கிலோ மீட்டர் சாலையை நான்கு வழிப் பாதையாக தயவுசெய்து மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகள் எல்லாம் கண்டறியப்பட்டு, அதற்கேற்றவாறு சாலைகளை அகலப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.*

2013 ஏப்ரல் 1]

அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கையில்கூட 8,580 கோடி ரூபாயிலே 1,678 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை ஆறு வழிச் சாலைகளாகவும், நான்கு வழிச் சாலைகளாகவும் மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தங்கள் கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பின், அங்கே சாலைகளை விரிவுபடுத்துவதற்கு அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 112, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

112—

கால்நடைத் தீவனங்கள்

*227—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மானிய விலையில் விநியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் கால்நடைத் தீவனமானது ஈரோடு கால்நடைத் தீவன அலகில் உற்பத்திச்